தலைப்பு 224 - இலங்கை விமானப்படை - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 224 - இலங்கை விமானப்படையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப்படையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பறிக்கை 2025 மே 29 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப்படைக்கு உரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை விமானப்படையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு இலக்கம் 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் இலங்கை விமானப்படையின், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை இலங்கை விமானப்படையின், பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப்படையால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப்படையின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்களின் மீது கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதன இயந்திர உபகரணங்கள்

ஆதன இயந்திர உபகரணங்கள் கணக்கீடு செய்யப்படுகையில் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதி சாராத சொத்துக்கள் தொடர்பான அறிக்கையில் (ஏசீஏ 6) ஆண்டின் இறுதியில் காணிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 32.68 பில்லியன் எனக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் படி, காணிகளின் பெறுமதி ரூபா 31.18 பில்லியனாகக் காணப்பட்டமையால் அந்தப் பெறுமதிகளுக்கு இடையே ரூபா 1.5 பில்லியன் தொகையான வேறுபாடு காணப்பட்டது.	முகாம்களால் வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின் அடிப்படையில் கணக்கீடு செய்தமையால் ஏற்பட்ட தவறாகும்.	ரூபா 1.5 பில்லியன் தொகையான வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து சரிசெய்ய வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு, விமானப்படையால் மொத்தம் ரூபா 53.91 மில்லியன் பெறுமதியான வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 43 கணினி மென்பொருட்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. இந்தச் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில்	கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருளின் கிரயத்தின் அடிப்படையிலும், தகவல் தொழில்நுட்பப் பிரிவால்	தொடர்புடைய அருவ சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

	வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், விமானப்படையால் 2009 முதல் மீளாய்வாண்டு வரை உள்நாட்டில் உருவாக்கப்பட்ட 159 கணினி மென்பொருட்களின் கொள்விலை கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	தயாரிக்கப்பட்ட மென்பொருட்களின் மதிப்பீட்டுப் பெறுமதியும் நிதிசாராச் சொத்து அறிக்கைகளின் மூலம் எதிர்வரும் காலத்தில் வெளியிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக.	
(iii)	2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் நடைபெற்று வரும் பணிகளின் பெறுமதி தொடர்ச்சியாகக் கூட்டப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் இறுதி மீதியாக நிதிசாரா சொத்துக்களின் கூற்றில் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு ஆண்டும் பூர்த்தி செய்யப்பட்ட பணிகளின் கிரயம், பூர்த்தியடைந்த பணியாக மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் கட்டுகுருந்த விமானப்படை தளத்தில் மாத்திரம் பூர்த்தியடைந்த பணிகளின் பெறுமதி ரூபா 108.98 மில்லியன் ஆக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் இப் பெறுமதி மீளாய்வாண்டில் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. மூலதனமாக்கப்படாத மீதமுள்ள பெறுமதி கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	சுட்டிக்காட்டப்பட்டதன் படி, அந்த ஆண்டுகளில் பூர்த்தியடைந்த பணிகளின் பூர்த்தி செய்யப்பட்ட கிரயங்களை நிதிசாராத சொத்துகளாக தனித்தனியாக வெளிப்படுத்துவதற்கு தேவையான முன்னோடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக.	நடைபெற்று வரும் பணிகளிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் பூர்த்தியடைந்த தொகைகள் சரியாக மூலதனமாக்கப்பட வேண்டும்.
(iv)	மொத்தம் 93,206 சதுர அடிகளைக் கொண்ட 60 கட்டிடங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை மதிப்பிடப்படாதிருந்தமையால் இக் கட்டிடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	முகாம் கட்டிடங்களின் பெறுமதியில் வேறுபாடு உள்ளதுடன் அரச கணக்குகள் திணைக்களத்திடம் இருந்து ஆலோசனை பெறப்பட்டு தேவையான திருத்தங்கள் செய்யப்படுவதாக.	குறித்த கட்டிடங்களை மதிப்பிட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(v)	இலங்கை விமானப்படை தலைமையகம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கிடப்பட்டிராததுடன் இதன் விளைவாக, அதன் விளைவாக அப் பெறுமதியால் இலங்கை விமானப்படையின் தேறிய சொத்துக்கள் மதிப்பால் குறைத்துக்	இந்தக் காணி சட்டப்பூர்வமாகக் கையகப்படுத்தப்படுவது/ கையேற்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் அந்	தலைமையக காணி மற்றும் கட்டிடங்களை விரைவாகக் கையகப்படுத்தப்பட்டு கணக்கிடப்பட வேண்டும்.

	கணக்கிடப்பட்டிருந்தன.	நடவடிக்கைகள் முடிவுற்றதை அடுத்து ஆவணப்படுத்தப்படும்.	
(vi)	மீளாய்வாண்டின் இறுதியில் விமானப்படையில் உள்ள இராணுவ உபகரணங்கள், நிதிக்கூற்றுக்களில் நிதிசாராச் சொத்துக்களாக சேர்க்கப்பட்டிராததுடன் இதன் விளைவாக, இச் சொத்துக்களின் பெறுமதியில் தேறிய சொத்துக்களும் குறைத்துக் கணக்கிடப்பட்டிருந்தன.	தேசிய பாதுகாப்பு தொடர்பான முக்கியமான தகவல்கள் காரணமாக, நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிராத துடன் இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனை பெறப்பட்டதை உடனடுத்து அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	நிறுவனத்திற்குரிய நிலையான சொத்துக்களின் பெறுமதி கணக்கிடப்பட வேண்டும்.
(vii)	நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதி சாராத சொத்துக்களின் அறிக்கையில், மீளாய்வாண்டின் இறுதியில் மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட வாகனங்களின் பெறுமதி ரூபா 5,622.66 மில்லியனாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் படி, ஆண்டின் இறுதியில் வாகனங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 5,986.96 மில்லியன் ஆனமையால் அந்த பெறுமதிகளுக்கு இடையே ரூபா 364.30 மில்லியன் தொகையான வேறுபாடு நிலவியது.	எழுந்துள்ள முரண்பாட்டைத் தவிர்த்து சரிசெய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படுவதாக.	சொத்துக்கள் தொடர்பான சரியான பெறுமதிகள் கணக்கிடப்பட வேண்டும்.
(viii)	மீளாய்வாண்டின் இறுதியில் விமானப்படைக்குச் சொந்தமான மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி ரூபா 10,715.37 மில்லியன் என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசாராச் சொத்துக்களின் கூற்றில் (ஏசீஏ 6) மீளாய்வாண்டின் இறுதியில் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 15,252.81 மில்லியனாகக் குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 4,537.44 மில்லியன் தொகையான வேறுபாடு நிலவியது.	முகாம்களால் வழங்கப்பட்ட தகவல்களில் சில முரண்பாடுகள் உள்ளமையால், எதிர்காலத்தில் அதை சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	வேறுபாடுகள் அடையாளம் காணப்பட்டு சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ix)	மீளாய்வாண்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகளுடன் தொடர்புடைய கொள்வனவுகளாக ரூபா. 298.99 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்த	முடிக்கப்பட்ட செலவுகளை தனித்தனியாக நிதி அல்லாத	உறுதிப்படுத்தப்பட்ட ஆண்டின் இறுதியில் நடந்து கொண்டிருக்கும்

போதிலும், கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, இப் பெறுமதி ரூபா 0.52 மில்லியனாகக் காணப்பட்டமையால், ரூபா 298.47 மில்லியனால் வேறுபாடு நிலவியது.	சொத்துக்களாகச் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக.	பணியின் கிரயம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
579 விமானப்படை அதிகாரிகளில் 01 முதல் 20 வரையிலான காலத்தில் நிலுவையான கடன் மீதிகள் அறவிடப்படுகையில் ரூபா 2.14 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான மேலதிக அறவீடுகள் திருப்பிச் செலுத்துதலாக முற்பண பீ கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்த எனினும் அத் தீர்வுகள் உண்மையில் தீர்க்கப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு உரிய பொருத்தமான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	இந்த மேலதிக அறவீட்டுக் கடன் மீதிகள் பொது நிதி சுற்றறிக்கை 01/2024 இன் படி நி.பி. 113 கணக்கீட்டுத் தவறுகளைத் திருத்துவதன் கீழ், புத்தகங்களிலிருந்து விடுவிக்கப்படுவதற்கான வரைவுகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பதிவளிப்பதற்காக குறித்த குழுவால் அவற்றை கருத்திற்கொண்டிராமையால் கணக்கில் முன்கொண்டுவர வேண்டியிருந்ததாக	கடன் மீதிகள் அறவிடப்படுவது மற்றும் கணக்கீடு செய்யப்படுவது சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	கடந்த வருடத்தின் அறிக்கையின் பந்திக்கான தொடர்பு	நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரை	இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு
(i)	2.5	2017 இன் 24 ஆம் இலக்க புதிய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உரித்தான முற்பணம் தனிநபர் வருமான வரி (APIT) கணிப்பிடப்பட வேண்டும்.	-
(ii)	2.1 (ஆ)	05 – 20 வருட கால தாமதமாக உள்ள நிலுவையில் உள்ள ரூபா 12,67 மில்லியன் தொகையான விமானப் போக்குவரத்து வருமானம் அறவிடப்பட வேண்டியதாக உள்ளமை.	3.1 (அ)
(iii)	3.5	அறவிடப்பட வேண்டிய விமான தளங்கள் மற்றும் கட்டிடங்களிலிருந்து வாடகை வருமானமான ரூபா 420,454 கூட்டுத்தொகையை விரைவாக அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	3.1 (ஆ)

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் இறுதியில், 06 முதல் 21 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக நிலவிவரும் விமானப் போக்குவரத்து வருமான நிலுவைத் தொகை ரூபா 12.67 மில்லியனாக இருந்தது, அந்த நிலுவைத் தொகைக்குள், 2004 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் இரண்டு தனியார் விமான நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட கூட்டுமொத்தத் தொகை ரூபா 3.61 மில்லியனான நிலுவை வருமானத் தொகை காணப்பட்டது.	விமானப்படைக் கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுக் கூட்டத்தில் தொடர்ச்சியாக 33 சந்தர்ப்பங்களின் போது கலந்துரையாடப்பட்டு தேவையான உத்தரவுகளை பிறப்பித்து, முன்னேற்றத்தை விசாரிப்பதாக.	இந்த நிலுவையான வருமானத்தை விரைவாக அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ) 2021 ஆம் ஆண்டில், கட்டுகுருந்த விமானப்படைத் தளத்தில் உள்ள விமானத்தளம் மற்றும் கட்டிடங்கள் முறையான ஒப்பந்தம் இன்றி ஒரு தனியார் விமான நிறுவனத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்காக விமானப்படைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 420,454 ஆன விமானத்தள மற்றும் கட்டிட வாடகை வருமானத்தை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை.	முழுத் தொகையையும் புத்தகங்களில் இருந்து பதிவளிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை அதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.	இந் நிலுவை வருமானத்தை விரைவாக அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ) விமானப்படைக்குச் சொந்தமான ட்ரோன்களைப் பயன்படுத்தி 2024 சனவரி 01 ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரை இலவசமாக மேற்கொள்ளப்பட்ட ட்ரோன் நடவடிக்கைகளுக்காக ரூபா 567,165 தொகையான இழப்பு ஏற்பட்டிருந்தது, மேலும் தொடர்புடைய சேவைகளை இலவசமாக வழங்குவதற்கு முறையான அனுமதி பெறப்பட்டதா என்பது குறித்து கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை.	விமானப்படையின் ஜனாதிபதி ஊடகப் பிரிவு, ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் தலதா மாளிகையின் ஊடகப் பிரிவு போன்ற நிறுவனங்களின் கடமைகளுக்கான ட்ரோன் கட்டணங்களா	பிற நிறுவனங்களுக்கு இலவசமாக சேவைகளை வழங்குகையில் முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) இந்திய கடன் திட்டத்தின் கீழ், 224-1-1-7-2509 ஆம் இலக்க செலவின விடயம் மற்றும் 224-1-1-2-2509 Income Generated Commercial Projects செலவின விடயத்திற்கு முறையே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 250 மில்லியன் மற்றும் ரூபா 150 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது.	இலங்கை கடன் செலுத்தாத நாடாக அறிவிக்கப்பட்டதுடன் இந்தக் கடன் திட்டம் முடக்கப்பட்டதை அடுத்து வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் இதற்கான கொடுப்பனவுகள் கணக்கிடப்படுவதற்கான அங்கீகாரமளிக்கப்பட்டிராமையாலும் 2024 ஆம் ஆண்டில் MA - 60 விமானங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையாலும் இந்தச் செலவின விடயங்களின் ஒதுக்கீடுகள் எஞ்சியுள்ளதாக.	செயல்பாடுகள் நடைபெறாத சூழ்நிலையில் மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும்.

(ஆ)	20 மீண்டெழும் செலவின விடயங்களுக்கான ரூபா 26.05 பில்லியன் தொகையான மொத்த தேறிய ஒதுக்கீட்டில் ரூபா 4.51 பில்லியன் தொகையான ஒதுக்கீடும் 10 மூலதனச் செலவின விடயங்களுக்கான ரூபா 17 பில்லியனிலான மொத்த தேறிய ஒதுக்கீட்டில் ரூபா 5.19 பில்லியன் கூட்டுத்தொகையான ஒதுக்கீடும் பயன்படுத்தப்பட்டிராமையால் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் குறித்த சேமிப்புத் தொகை செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய ஒதுக்கீட்டில் 5.7 சதவீதத்திலிருந்து 99.9 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது.	சிக்கனமான செலவு, தொடர்புடைய பெறுகைகளைப் பூர்த்தி செய்ய இயலாமை மற்றும் உரிய நேரத்தில் கட்டுநிதி பெறப்பட்டிராமை போன்ற காரணங்களால் இந்த சேமிப்பு ஏற்பட்டுள்ளதாக.	மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடுகள் திறமையாகவும் ஆக்கபூர்வமாகவும் செலவிடப்பட வேண்டும்.
(இ)	224-1-1-0-1402 (தபால் மற்றும் தொடர்பு) செலவின விடயங்களுக்காக, ஏனைய மீண்டெழும் செலவின விடயங்களில் இருந்து ரூபா 8.63 மில்லியன் மாற்றப்பட்டுள்ளது. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் இவ்வாறு மாற்றப்பட்ட மொத்த ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் 05 மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 513.63 மில்லியன் தொகை மாற்றப்பட்டிருந்ததுடன் ஆண்டு இறுதியில் இதில் மொத்தம் ரூபா 103.82 மில்லியன் அதாவது 20 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.	கடந்த மாதத்தில் தொலைபேசி பட்டியல்களைப் பெறுவதில் தாமதம், பட்டியல்களைச் செலுத்துவதற்காக போதுமான நேரம் இன்மை, நிலுவையான ரேஷன் கொடுப்பனவுகள் வழங்கப்படும் அளவில் குறைவு மற்றும் கட்டுநிதி இன்மை போன்ற காரணங்களால் சேமிப்பு ஏற்பட்டுள்ளதாக.	மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடுகள் திறமையாகவும் ஆக்கபூர்வமாகவும் செலவிடப்பட வேண்டும்.

3.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படுதல்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அடையாளம் காணப்பட்ட படி, மீளாய்வாண்டின் இறுதியில் 16 சந்தர்ப்பங்களின் போது ஏற்படுத்தப்பட்ட ரூபா 71.90 மில்லியன் தொகையான பொறுப்புகள் நிதிக்கூற்றுக்களுடன் வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கை (இணைப்பு III) இன் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	15 பட்டியல்களின் தொகை பொறுப்புகள் பதிவேட்டில் சேர்க்கப்பட்டிராமை விமானப்படையின் பாதீட்டுப் பிரிவினால் நேர்ந்த ஒரு கவனக்குறைவாகும்.	பொறுப்புகள் சரியாக அடையாளம் காணப்பட்டு நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளியிடப்பட வேண்டும்.

3.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) விமானப்படைக்கு மீளாய்வாண்டின் போது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சிலிருந்து மொத்தம் ரூபா 2.08 பில்லியன் ஒதுக்கீடு பல்வேறு செயற்திட்டங்களையும் திட்டங்களையும் செயற்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் இதில் ரூபா 1.55 பில்லியன் ஒதுக்கீடு எஞ்சியிருந்தது. இச் சேமிப்பு 65 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. ஹிங்குராக்கொட விமான நிலையத்தின் மேம்பாட்டிற்காக வழங்கப்பட்ட ரூபா 2 பில்லியன் ஒதுக்கீட்டில் 75 சதவீதம் ஆண்டு இறுதியில் மீதமாகி இருந்தது. இலக்கிடப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்யப்படாதிருந்தது.	போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு 2024 ஆம் ஆண்டிற்கு உரித்தான பட்டியல்களை குறித்த காலப்பகுதிக்குள் வழங்கியிராததுடன் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சினால் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதற்கு 2024.06.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான அங்கீகாரம் 2024.07.02 ஆம் திகதி பெறப்பட்டிருந்தது. இந்த திட்டத்தின் கட்டுமானப் பணிகளை விமானப்படை தொடர்ந்து மேற்கொண்டிருந்த போதிலும், 2024.12.31 ஆம் திகதி வரையில் 34 சதவீத பௌதீக முன்னேற்றத்தை மட்டுமே பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்ததாக.	பிற அமைச்சுகளாலும் திணைக்களங்களாலும் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளைத் திறமையாகப் பயன்படுத்தி இலக்கிடப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்ய வேண்டும்.

3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	பெறுமதி ரூபா	இணங்காமை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்				
	நிதிப் பிரமாணம் 104 (3) மற்றும் 104 (4)	-	2003 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை 215 சந்தர்ப்பங்களில் நேர்ந்திருந்த மொத்தம் ரூபா 14.89 மில்லியனான இழப்புகள் மற்றும் சேதங்கள் தொடர்பான ஆரம்ப அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் விமானப்படையின் பல்வேறு சொத்துக்களுக்கு 1999 முதல் 2024 வரை ஏற்பட்ட 65 நிகழ்வுகளுக்கு உரித்தான ரூபா 2.18 பில்லியனான இழப்புகள் மற்றும் சேதங்கள் தொடர்பான ஆரம்ப அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு 01 முதல் 144 மாதங்கள் வரை தாமதம் ஏற்பட்டிருந்தது. மேலும், 2002 முதல் 2024 வரை 158 நிகழ்வுகளுக்கு மொத்தம் ரூ. 1.9 பில்லியன் இழப்புகள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக முழுமையான அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	இழப்பு ஏற்பட்ட 7 நாட்களுக்குள் ஆரம்ப அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், பிரிவு 104(4) இன் கீழான இறுதி அறிக்கைகளை இழப்பு ஏற்பட்ட 03 மாதங்களுக்குள் சமர்ப்பிப்பதற்கு விமானப்படை மூலம் இயலுமான அனைத்து முயற்சிகளையும் இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக.	குறித்த காலத்திற்குள் நிதிப் பிரமாணத்தின் படி ஆரம்ப அறிக்கைகளையும் முழுமையான அறிக்கைகளையும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	பொது நிர்வாகச் சுற்றறிக்கை				
	2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க		விமானப்படைக்குச் சொந்தமான 56 கார்களுக்கும், 22 வான்களுக்கும், 92 கப் வண்டிகளுக்கும், 112 ஜீப் வண்டிகளுக்கும், 46 பேருந்துகளுக்கும், 17 முச்சக்கர வண்டிகளுக்கும், வாடகை	தற்காலிகமாக சேவையிலிருந்து விலக்கப்பட்ட, அகற்றல் நடவடிக்கைகளுக்காக ஓட்டத்திலிருந்து விலக்கப்பட்ட மற்றும்	எரிபொருள் நுகர்விற்கான ஆய்வு சுற்றறிக்கை ஏற்பாடுகளின்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி	அடிப்படையில் பெறப்பட்ட 359 கார்களுக்கும், 05 வான்களுக்கும் 12 கப் வண்டிகளுக்கும் மீளாய்வாண்டின் போது எரிபொருள் நுகர்வுக்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. போக்குவரத்துப் பிரிவால் நிர்ணயிக்கப்பட்ட எரிபொருள் நுகர்வுகளின் அளவோ அல்லது ஒவ்வொரு பயணத்திலும் நுகரப்பட்ட எரிபொருள் நுகர்வின் அளவின் படி நாளோட்ட அட்டவணைகள் சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை என.

3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
6000-0-0-13-097 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் மூலம் நிர்மாணத்திற்கான வைப்புத்தொகை வைத்துக் கொள்ளப்படுவதுடன் அந்த வைப்புத்தொகைகளில், 16 சந்தர்ப்பங்களில் ரூபா 9.37 மில்லியன் தொகையான வைப்பு, இலங்கை விமானப்படையின் சட்டப்பூர்வமற்ற நிதியத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளது.	நிர்மாணிப்புச் செயற்திட்டங்களுக்காக கடன் அடிப்படையில் அப் பொருட்களும் சேவைகளும் வழங்கப்படாத சந்தர்ப்பங்களில், குறித்த பணிகளை மேற்கொள்கையில் உள்ள ஒரே மாற்றுவழியாக நலன்புரி கணக்குகள் மூலம் திருப்பிச் செலுத்துவதன் அடிப்படையில் பெறுகையைப் பூர்த்தி செய்ததை அடுத்து அரசாங்க நிதியின் மூலம் திருப்பிச் செலுத்துவதாக.	வைப்புத்தொகை, சட்டப்பூர்வமற்ற நிதிகளுக்கு செலுத்தப்படலாகாது.

3.7 முற்பண வழங்கலும் தீர்ப்பனவுகளும்

கணக்காய்வு அவதானிப்பு	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
1 முதல் 28 ஆண்டுகள் வரையான காலப்பகுதியின் போது 81 விமானப்படை மற்றும் சிவில் அதிகாரிகளிடமிருந்து இதுவரை அறவிடத் தவறிய மொத்தம் ரூபா 5,108,666 இடர் கடன்கள், சொத்துகள், வெள்ளம், விழா	சில கடன் மீதிகள் தற்போது அறவிடப்பட்டு வருகின்றன, மேலும் ரூபா 100,000 இற்கும் மேலதிகமான கடன்களுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபர்	தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.3 ஆம் பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படியும் 4.3 இன்

மற்றும் விசேட முற்பணக் கடன்கள் நிலுவையில் இருந்தன. இந்தக் கடன் மீதிகளில், 1 முதல் 28 ஆண்டுகள் வரையான காலப்பகுதியின் போது சேவையை விட்டு விலகிச்சென்ற 59 பேரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 4,790,536 கடன் மீதிகள் இருந்தன. இந்த நிலுவையில் உள்ள கடன்களை அறவிடும் நடைமுறை திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை.	திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக.	விதிகளின்படியும், 2024 மே 29 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 (III) ஆம் பந்தியின் படியும் நடவடிக்கை எடுத்து இந்தக் கடன் நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி, ரூபா. 487.30 மில்லியன் செலவில் திட்டமிடப்பட்ட 61 பணிகள் ஆண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஆண்டு முழுவதும் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாமையாலும் சில சேவைகள் நிறுத்தப்பட வேண்டியிருந்தமையாலும் இந்தப் பணிகளை மேற்கொள்ள இயலாது போனதாக.	செயல் நடவடிக்கைத் திட்டத்தை ஒரு முக்கிய முகாமைத்துவ உத்தியாகக் கருதி, எதிர்பார்க்கப்படும் செயற்திறனை அடைய வேண்டும்.

4.2 எதிர்பார்த்த அளவிலான பூர்த்தி நிலையை அடையத் தவறியமை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி, ரூபா. 13.40 பில்லியன் செலவில் திட்டமிடப்பட்ட 157 பணிகளில் ஆண்டின் இறுதிக்குள் அடையப்பட்ட முன்னேற்றம் 0.52 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையாக இருந்தது.	மேலதிக் நேரக் கொடுப்பனவுகளைக் கட்டுப்படுத்துதல், சரியான நேரத்தில் கட்டுநிதியைப் பெறாமை, செயற்திட்டங்கள் இடையே நிறுத்தி வைத்தல், விகிதங்களில் மாற்றங்கள், பெறுகை நடவடிக்கைகளில் தாமதம், இறக்குமதி கட்டுப்பாடுகளை விதித்தல் மற்றும் சில திட்டங்களை	செயல் திட்டத்தை ஒரு முக்கிய முகாமைத்துவ உத்தியாகக் கருதி, எதிர்பார்க்கப்படும் செயல்திறனை அடைய வேண்டும்.

மாற்ற வேண்டிய நேர்ந்தமை போன்ற காரணங்களால் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தை அடைய முடியாது போனதாக.

4.3 பெறுகைகள்

மீளாய்வாண்டில் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையாக மொத்தம் ரூபா 112.76 மில்லியன் பெறுமதியான 06 பெறுகைகள் ஆய்வு செய்யப்படுகையில் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மொத்தம் ரூபா 98.36 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்ட 05 பெறுகைகளில் சர்வதேச வரையறுக்கப்பட்ட போட்டி ஏல முறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பெறுகை வழிகாட்டலின் 6.2.2 இன் படி ஏல அழைப்பின் போது குறைந்தபட்சம் 42 நாட்களேனும் வழங்கப்பட வேண்டிய போதிலும் ஏலதாரர்களுக்கு 07 நாட்கள், 14 நாட்கள் மற்றும் 21 நாட்கள் வரையான காலம் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 14.41 மில்லியன் செலவில் 11 சந்தர்ப்பங்களில் கூரைத் தகடுகள் கொள்வனவு செய்யப்படுகையில் வரையறுக்கப்பட்ட தேசிய போட்டி முறையான ஏல முறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டலின் 6.2.2 இன் படி ஏலங்களை அழைப்பிற்கான ஆகக் குறைந்தபட்சக் காலமாக 21 நாட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் ஏலதாரர்களுக்கு 07 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. இந்த நிலைமை மேற்குறித்த பெறுகை வழிகாட்டுதல்களின் மீறலாகவும், போட்டி விலையைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சியாகவும் காணப்படுகிறது.	IOR மற்றும் AOG (விமானத் தரைவழி) அடிப்படையில் தொடர்புடைய பொருட்களுக்கான ஏலங்களைச் சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களும் 14 நாட்களுமான காலம் ஏலங்களை சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்டுள்ளதாகவும் தற்போது பெறுகை வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	பெறுகை வழிகாட்டுதல்களின் படி ஏலங்கள் அழைக்கப்படுகையில் வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச காலம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)	தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை நியமிப்பதற்காக 20 முதல் 28 நாட்கள் வரை தாமதமாகியுள்ளது, மேலும் அந்தக் காலகட்டத்தில் பெறுகைச் செயன்முறையும் தாமதமாகியுள்ளது. இந்த தாமதங்கள் காரணமாக, பெறுகை வழிகாட்டுதல்கள் 2.6.1 (அ) (i), (ii), (iv) மற்றும் 5.3.1 (ஈ) ஆகியவை மீறப்பட்டிருந்தன.	தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை நியமிப்பது படைத் தளபதி அலுவலகத்தால் மேற்கொள்ள்பட்டுள்ளது. மேலும் செய்யப்பட்டுள்ளது, மேலும் பெறுகைக் கண்காணிப்புப் பிரிவால் நியமிக்கப்பட்ட குழுவிற்குத் தெரிவித்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	பெறுகை வழிகாட்டுதல்களின் படி விரைவாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	ரூபா 19.41 மில்லியன் செலவில் மெஸ் கிட் ஷூக்கள் Mess kit Shoes மற்றும் ரூபா 17.56 மில்லியன் செலவில் 197,700 Braid Materials கொள்வனவு செய்யப்படுகையில் பெறுகைத் திட்டம் மற்றும் ஏல ஆவணங்களில், சர்வதேச வரையறுக்கப்பட்ட ஏல முறை பின்பற்றப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் உள்ளூர் ஏலதாரர்களிடமிருந்தும் விலைகள் கோரப்பட்டிருந்ததுடன் இந்த 3.3 பெறுகை வழிகாட்டுதல்களில் குறிப்பிடப் பட்டுள்ள அளவுகோல்களைப் பொருட்படுத்தாமல், விலை போட்டியைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் இக் கொள்வனவுகள் சர்வதேச/தேசிய வரையறுக்கப்பட்ட கட்டுப்பாட்டு ஏல முறையின் கீழ் செய்யப்பட்டன. Mess kit Shoes கொள்வனவின் போது அதிக விவரக்குறிப்பு மாறுபாடுகளைக் கொண்ட வழங்குனர் பரிந்துரைக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் குறைந்த விலை வழங்குனர் பரிந்துரைக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருந்த போதிலும் அந்த வழங்குனரின் சுங்க மற்றும் போக்குவரத்து கட்டணங்களைக் கருத்தில் கொள்கையில் விலையுயர்ந்த வழங்குனரான மையால், விலக்கப்பட்ட வழங்குனரிடமிருந்து அது கொள்வனவு செய்யப்பட்டிருக்கு மாயின் ரூபா 3.81 மில்லியனைச்	போட்டியை அதிகரிப்பதற்காக அனைத்து வழங்குனர்களிடமிருந்தும் விலைகள் அழைக்கப்பட்டதுடன் சில விவரக் குறிப்புகள் தேவையை விட அதிகமாக இருந்தமையால், அது விமானப்படைக்கு நன்மை பயக்கும் என்பதனால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் விமானப்படை தலைமையகத்தால் நியமிக்கப்பட்ட தர ஆய்வுக் குழுவால் விவரக்குறிப்புத் தேவைகளைக் கருத்திற்கொண்டு இருப்பிற்கு எடுக்கப்பட்டதாகவும் குறித்த இருப்பின் அளவு 2026 ஆம் ஆண்டளவில் வழங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக.	பெறுகை வழிகாட்டுதல்களின் படி செயற்பட்டு ஏலங்களின் மதிப்பீடு சுயாதீனமாகவும், பாரபட்சமின்றியும் செய்யப்பட வேண்டியதுடன், மாதிரிகளின் படி முழு இருப்புகளும் உள்ளனவா என முறையான ஆய்வு செய்யப்பட்டு, தேவைகளை முறையாகக் கருத்திற் கொண்டு பெறுகைகளை மேற்கொள்ள வேண்டும்.

	சேமிக்க முடிந்திருக்கும். மேலும், Braid Materials கொள்வனவு செய்யப்படுகையில் குறித்த மாதிரிகளுடன் இணங்குவதாக எந்த ஆய்வறிக்கையும் இன்மையால், குறித்த இருப்புகள் சரியான தரநிலையிலும் தரத்திலும் பெறப்பட்டதா என்பது விவாதத்திற்குரியதாகும். 2024 நவம்பர் 13 அன்று களஞ்சியத்திற்குக் கிடைத்த 650 மெஸ் கிட் ஷூக்களில், ரூபா 12.84 மில்லியன் பெறுமதியான 632 மெஸ் கிட் ஷூக்கள் அதாவது 97 சதவீதமானவை 2025 ஏப்ரல் 25 ஆம் திகதி வரையிலும் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தன. மேலும், 2024 ஜூன் 20 ஆம் திகதி களஞ்சியத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 8.57 மில்லியன் பெறுமதியான 197,700 Braid Materials பொருட்களில், 139,418 பொருட்கள் அதாவது 70 சதவீதமானவை ஏறத்தாழ 10 மாதங்கள் களஞ்சியத்தில் விடுவிக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.		
(ஈ)	ரூபா 27.92 மில்லியன் செலவில் integrated valve and filter Assembly for rebuilding SUH 563 பெல் 212 ஹெலிகொப்டரைக் கொள்வனவு செய்கையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமிப்பதில் 23 நாட்களும் அவர்களின் பரிந்துரைகளை வழங்குவதில் 71 நாட்களும் தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் இந்த தாமதம் காரணமாக, வழங்குனர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட விலையில் குறித்த வழங்கலை விநியோகிக்க இயலாதென அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே, மீண்டும் விலைகள் கோரப்பட்டு, குறித்த வழங்குனரிடம் இருந்து மேற்குறித்த வழங்கலை அமெரிக்க 2,658 டொலர்கள் அதாவது ரூபா 815,670 தொகையை மேலதிகமாகச் செலுத்தி கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது.	தொடர்புடைய பெறுகை நடவடிக்கைகள் 2023 திசெம்பர் 20 ஆம் திகதி முதல் 2024 மார்ச் 22 ஆம் திகதி வரை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக.	பெறுகை வழிகாட்டுதல்களின் அத்தியாயம் 04 இன் படி கொள்வனவு நடவடிக்கைகள் முறையாகத் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.

(உ) ரூபா 14.41 மில்லியன் செலவில் 11 சந்தர்ப்பங்களில் 18,250 அடி நீளமான கூரைத் தகடுகள் கொள்வனவு செய்யப்படுகையில் பெறுகை வழிகாட்டுதல்களின் 3.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயங்களைப் புறக்கணித்து, விலைப் போட்டியைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் முறையான தர ஆய்வு அறிக்கை மூலம் துத்தநாகம் (சிங்க்) அலுமினியமாக அல்லது தகடுகளின் தடிமன் 0.47 மிமீ என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளாது தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவால் கொள்வனவு செய்யப்படுவதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 04 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட கூரைத் தகடு 2024 பெப்ரவரி 08 ஆம் திகதி ஆய்விற்குட்படுத்தப்படுகையில் களஞ்சியத்திலேயே துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.	வழங்குனர்களின் பட்டியலின் அடிப்படையில் சர்வதேச வரையறுக்கப்பட்ட ஏல செயன்முறையைப் பின்பற்றி கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் வழங்குனர்களால் உத்தரவாதக் காலத்திற்கு உட்பட்டு குறித்த தகடுகளின் அளவை மீள வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் புதிதாக வழங்கப்பட்ட தகடுகளுக்காக உத்தரவாதக் காலத்தை வழங்க முடியாது என வழங்குனர்கள் தெரிவித்துள்ளதாக.	பெறுகை வழிகாட்டுதல்களின் படியும் தரங்கள் தொடர்பாக முறையான ஆய்வின் பின்னர் கொள்வனவு செய்யப்பட வேண்டும்.

4.4 சொத்து முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விமானப்படையால் நீண்ட காலமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் சட்டப்பூர்வ உரித்தின்றி 639.2 ஹெக்டேர் காணிகளும் 07 கட்டிடங்களும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இச் சொத்துக்களுக்கான சட்டப்பூர்வ உரிமையைப் பெறுவதற்கான செயன்முறை மிகவும் மந்த நிலையில் நிலவியது. சட்டப்பூர்வ உரிமை இல்லாத போதிலும், குறிப்பிட்ட காணிகளில் விமானப்படையால்	இந்தச் சொத்துக்களின் சட்டப்பூர்வ கையகப்படுத்தல்/கையேற்பு நடவடிக்கைகள் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இந்த நடவடிக்கைகள் முடிவுற்றதை அடுத்து மதிப்பீடு செய்யப்பட்டு ஆவணப்படுத்தல் செய்யப்படுவதாகவும	சட்டப்பூர்வ உரிமையைக் கையகப்படுத்தல் விரைவுபடுத்தப்பட வேண்டும்.

	பெறுமதி வெளிப்படுத்தப்படாத பல்வேறு நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.		
(ஆ)	காப்புறுதிக் காப்பீடு இன்றி விமானப்படையின் 04 கார்கள், 43 வேன்கள், 159 கப் வண்டிகள், 87 பேருந்துகள், 216 ஜீப் வண்டிகள், 396 மோட்டார் சைக்கிள்கள், 48 முச்சக்கர வண்டிகள், 260 லாரிகள்/டிரக் வண்டிகள் மற்றும் 16 ஆம்புலன்ஸ்கள் மீளாய்வாண்டில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.	1955 ஜுலை 08 அன்று வெளியிடப்பட்ட 10815 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட தகவலின்படி, முப்படைகளின் வாகனங்கள் காப்புறுதிக் காப்பீடு மற்றும் வருமான உரிமைப் பத்திரங்களைப் பெறுவதற்கான நடைமுறைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.	மோட்டார் வாகனச் சட்டத்தின் விதிகளின் படி குறித்த வாகனங்களுக்கு காப்புறுதிக் காப்பீடு பெறுவது அவசியம்.
(இ)	விமானப்படையால் பதிவு செய்யப்படாத 03 கார்கள், 37 வேன்கள், 113 மோட்டார் சைக்கிள்கள், 57 கப் வண்டிகள், 44 பேருந்துகள், 208 ஜீப் வண்டிகள், 04 முச்சக்கர வண்டிகள், 103 டிரக் வண்டிகள், 06 பிரைம் மூவர்ஸ், 04 டம்ப் லாரிகள், 129 உழவு இயந்திரங்கள்/ கைஉழவு இயந்திரங்கள் மற்றும் 30 அம்பியூலன்ஸ்களைப் பயன்படுத்தப்பட்டிருந்தன.	பதிவு செய்யப்படாத வாகனங்கள், கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டின் முன்னுரிமை அடிப்படையில் வாகனங்களைப் பதிவு செய்வதற்காக 2024 செப்தெம்பர் 05 ஆம் திகதி மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக.	சம்பந்தப்பட்ட வாகனங்களை விரைவாகப் பதிவு செய்ய வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டின் இறுதிக்குள் பதிவு செய்யப்படாத மோட்டார் வாகனம் ஒன்று விமானப்படைக்குச் சொந்தமான ஒரு மோட்டார் சைக்கிள் சட்டப்பூர்வமாக மாற்றம் செய்யப்படாது பாதுகாப்பு அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் சட்டபூர்வ உரிமையை கையேற்காது இடர் முகாமைத்துவ மத்தியநிலையத்திற்கு	இந்த மோட்டார் வாகனமும் மோட்டார் சைக்கிளும் தற்காலிக அடிப்படையில் பாதுகாப்பு அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த வாகனங்களின் பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகள் விமானப்படையால் மேற்கொள்ளப்படுவதாகவும் 3 தண்ணீர் பவுசர்களையும் அம்பியூலன்ஸ் வண்டியையும் கையகப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்கள் மோட்டார் வாகனப் போக்குவரத்துத்	சட்டப்பூர்வ கையகப்படுத்தல்களும் விடுவிப்புகளும் மேற்கொள்ளளப்பட வேண்டும்.

	உரித்தான 3 தண்ணீர் பவுசர்களும் ஜப்பான்-இலங்கை நட்புறவு சங்கத்திற்குச் சொந்தமான ஒரு அம்பியூலன்ஸூம் சட்டப்பூர்வ உரிமையின்றி விமானப்படையால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.	திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக.	
(உ)	கட்டுகுருந்த இராணுவ முகாமின் காணி 85 ஏக்கர் 02 ரூட்கள் மற்றும் 21.62 பேர்ச்சஸ் கொண்டதாக இருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டில் அந்த காணி 81 ஏக்கர் 03 ரூட்கள், 7.9 பேர்ச்சஸ் என 03 ஏக்கர் 0 ரூட்கள் மற்றும் 14.53 பேர்ச்சஸ் குறைவாகக் காட்டப்பட்டிருந்த போதிலும், இதுவரை குறித்த நிலைமையைத் தீர்ப்பதற்கு தவறிவிடப்பட்டிருந்ததுடன் விமான ஓடுபாதை விரிவாக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட 21 காணித் துண்டுகளில், 0.6521 ஹெக்டேர் அளவிலான 02 காணிகள் கணக்காய்வுத் திகதி வரையிலும் கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், 2001 ஆம் ஆண்டில் முகாமிற்கு நன்கொடையாக் கிடைக்கப்பெற்ற 01 ஏக்கர் 7.9 பேர்ச்சஸ் கொண்ட காணி மூன்று அத்துமீறிய குடியிருப்பாளர்களால் கையகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	விமானப்படை அளவையியலாளர் ஒருவர் வருகை தந்து கட்டுகுருந்த முகாமிற்குச் சொந்தமான காணியை முழுமையான அளவீட்டை மேற்கொண்டிருந்ததுடன் அங்கு காணி அளவில் முரண்பாடு இருப்பதாகவும், 0.6521 ஹெக்டேயர் பரப்பளவைக் கொண்ட இரண்டு காணிகளையும் களுத்துறை பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக.	சம்பந்தப்பட்ட காணிகளை விரைவாக விடுவிக்க வேண்டியதுடன் அத்துமீறிய குடியிருப்பாளர்களை வெளியேற்றுவது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.5 நட்டங்களும் இழப்புகளும்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது, கண்டறியப்பட்டவாறு 2023 ஆம் ஆண்டில் நிகழ்ந்த ரூபா 52.39 மில்லியன் மொத்தப் பெறுமதியான இரண்டு இழப்புகளும் சேத சம்பவங்களும் இழப்பு மற்றும் சேத பதிவேடுகளில் சேர்க்கப்படவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போதும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும் (இணைப்பு ii) ஏடுகளில் இருந்து தள்ளுபடி தொடர்பான கூற்றின் மூலம் இழப்புகளாகவோ நட்டங்களாகவோ வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 70.54 மில்லியனான 10 ஆண்டுகளுக்கும் மேலான 15 சம்பவங்களும், ரூபா 88.86 மில்லியனான 5 முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 12 சம்பவங்களும் நேர்ந்திருத்ததுடன் இச் சம்பவங்கள் தொடர்பான இழப்புகளை அறவிடுவதற்கோ அல்லது தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கைகள் மந்த நிலையில் காணப்பட்டன.	தவறுதலாக இணைப்பு ii இன் கீழ் புத்தகங்களில் இருந்து பதிவளிக்கப்பட்ட அல்லது அறவிடுதலுக்கான அறிக்கையில் சேர்க்கப்பட்டிராததுடன் குறித்த நிகழ்வுகள் அடுத்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட உள்ளன, மேலும் அவதானிக்கப்பட்ட இழப்புகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக.	குறித்த இழப்புகளும் நட்டங்களும் ஆவணப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளியிடப்பட வேண்டும். மேலும் அறவிடுவதற்கான அல்லது தள்ளுபடிக்கான நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும்.

4.6 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
அதிகாரிகளின் பயன்பாட்டிற்காகவும், வேறு போக்குவரத்துத் தேவைகளுக்காகவும், 359 மோட்டார் கார்கள், 12 டபிள் கப் வண்டிகள் மற்றும் 05 வேன்கள் மாதத்திற்கு ரூபா 50,000 முதல் ரூபா 300,000 வரை வாடகை அடிப்படையில் வெளி நபர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. உடன்படிக்கைகளின் படி, குறித்த வாகனங்கள் மாதத்திற்கு அதிகபட்சமாக 3000 கிலோமீட்டர் வரை மேற்குறித்த விலைகளில் ஓடக்கூடியதாக இருந்தன. மீளாய்வாண்டில் இந்த வாடகை வாகனங்களுக்கான மொத்த செலவு ரூபா 574.5 மில்லியன் ஆகும். மேலும்	வாகனங்கள் உரித்துடைய அதிகாரிகளின் எண்ணிக்கை 146 ஆனதுடன் பணியிடங்களிலிருந்து வீடுகளுக்கான தூரத்திலான மாற்றம், எரிபொருள் சிக்கனமாகப் பயன்படுத்தப்படுவதனால் உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்தும் கிலோமீட்டர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட குறைவும் முடிந்தவரை	வாடகை அடிப்படையில் வாகனங்களை வாகன அணியில் சேர்க்கும் போது, விலைகள் அதிகரிக்காது அதிகபட்ச கிலோமீட்டர்களின் எண்ணிக்கையை பயணிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒவ்வொரு மாதமும், 500 கிலோமீட்டருக்கும் குறைவாகவே வாகனங்கள் ஓட்டிய 57 சந்தர்ப்பங்களும் 500 முதல் 1000 கிலோமீட்டருக்கு இடையில் வாகனங்கள் ஓட்டிய 141 சந்தர்ப்பங்களும், 1000 முதல் 2000 கிலோமீட்டருக்கு இடையில் வாகனங்கள் ஓட்டிய 1,206 சந்தர்ப்பங்களும் 2000 முதல் 3000 கிலோமீட்டருக்கு இடையில் வாகனங்கள் ஓட்டிய 2,169 சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. வாடகை வாகனங்களின் எண்ணிக்கையைக் குறைத்து, உடன்படிக்கையிடப்பட்ட அதிகபட்ச கிலோமீட்டர்களைப் பயன்படுத்தி, அரசாங்கத்திற்கு அதிக பொருளாதார நன்மைகளைப் பெறக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படக் கூடிய போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிக்கவில்லை.	கூட்டங்கள் போன்றவை வழிகாட்டல் முறைகளின் மூலம் நடத்தப் பட்டமையால் ஓட்டத்தில் ஈடுபடும் கிலோமீட்டர் களின் எண்ணிக்கை குறைவடைந்திருந்ததாக.	

5. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில், விமானப்படைக்காக பணியாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக ரூபா 300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 75 மில்லியன் தொகை ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது. பயிற்சித் திட்டத்தின் படி, ஆண்டின் போது 182 உள்நாட்டு பாடநெறிகளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 167 மட்டுமே நடத்தப்பட்டிருந்தன. 151 வெளிநாட்டு பாடநெறிகளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பயிற்சித் திட்டத்தை விட 47 பாடநெறிகள் அதிகமாக 198 வெளிநாட்டு பாடநெறிகள் நடத்தப்பட்டன.	உள்ளூர் பயிற்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் எஞ்சியிருக்கவில்லை என.	வருடாந்தப் பயிற்சித் திட்டத்தின் படி பயிற்சிப் பாடநெறிகளை ஒழுங்கமைத்தல் வேண்டும்.